மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்புக் கொடுக்கத்தான் இருக்கிறேன்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: நான் கிராமப் பகுதியில் வசிக்கிறவன். ஆறறிவு படைத்த நமக்கெல்லாம் வைத்திய சிகிச்சை பெறுவதற்கு போக்குவரத்து வசதிகள் செய்து தருகிறார்கள். நாட்டிலே கால்நடைச் செல்வம் முக்கியமான செல்வம் என்று கூறி, நாட்டினுடைய பெருமையைக் கொண்டாடுகிறோம். ஆகையால் கிராமப்புறங்களில் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு நடக்க முடியாமல் போகும்போது, அவை வைத்திய சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமலும், மருத்துவர்கள் கிராமங்களுக்கு வந்துபோக வாய்ப்பு இல்லாமலும் இருக்கிறது. ஆகவே போக்குவரத்து மூலம் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) வாகன வசதிகளை போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறறிவு படைத்த மனிதர்களை ஏற்றிச் செல்வதற்குத் தேவையான பேருந்து வசதிகளை நாம் செய்து தர வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல், நாயைக் கொண்டு சென்றால் அது கடிக்கும். யானையை ஏற்றிச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வேண்டுமென்றே எங்கள் ஊரில் யானை இருக்கிறது, அது நோய்வாய்ப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை எதிலே ஏற்றுவது? ஆகவேதான் இந்த இக்கட்டான சூழ்நிலை இருக்கிற காரணத்தால் 5 அறிவு உள்ள மிருகங்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 328. திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

328—

அண்ணாநகர் மேற்கு டிப்போவிலிருந்து தலைமைச் செயலகத்திற்குப் பேருந்து.

9935 –* **திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாநகர் மேற்கு டிப்போவிலிருந்து 7-சி சாதாரணக் கட்டணப் பேருந்து, திருமங்கலம் வழியாக காலை 9 மணிக்கும், மாலை 5-45 மணிக்கு தலைமைச் செயலகத்திலிருந்தும் இயக்க அரசு முன்வருமா?

1993 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நகர் மேற்கு டெப்போவிலிருந்து இப்போது எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக எஸ்.கே. நகருக்கும், பாரிமுனைக்கும் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அதே டெப்போவிலிருந்து நம்முடைய தலைமைச் செயலகத்திற்கு ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் விட்டிருந்தார்கள். அதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுத்தி இருக்கிறார்கள். எனவே மீண்டும் அண்ணாநகர் மேற்கு டெப்போவிலிருந்து தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்களும், பொதுமக்களும் வந்து சேர்வதற்கு வசதியாக காலை 9 மணிக்கும், மாலை இங்கேயிருந்து 5–45 மணிக்கும் புறப்படும் வகையிலே ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகு தான் தலைமைச் செயலகத்திற்கு ஏறத்தாழ 40 பேருந்துகளை நாம் இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தை நான் மனதிலே கொண்டு, மிக விரைவாக இன்னும் 15 நாட்களில் அந்தப் பேருந்து இயக்கப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் உங்களுக்கு வாக்குறுதி அளித்துவிட்டார்கள். திரு. ஆர்.பி. பரமசிவம்.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு பல அரசு ஊழியர்கள் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தந்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்வதோடு, பொதுமக்கள் சார்பாகவும் என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 329, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.